Bundesamt
für Migration
und Flüchtlinge

# ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பு குறித்த தகவல் பத்திரம்

நீண்டகாலம் ஜெர்மன் நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவருக்கும், கூட்டு ஐரோப்பிய பிரஜைகளுக்கும், ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பு நாடு ஒன்றின் பிரஜைகளுக்கும், ஜேர்மன் பிரஜா உரிமையை கொண்ட போதிய அளவு ஜேர்மன் மொழி தெரியாதவர்களுக்கும்.

அன்பான ஜேர்மன் நாட்டில் வாழும் வெளிநாட்டவர்களே,

நீங்கள் ஜேர்மன் நாட்டில் பல காலமாக வசிக்கும் வெளிநாட்டவர்களாயினும் சரி அல்லது கூட்டு ஐரோப்பிய பிரஜைகளாயினும் சரி ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பு நாடு ஒன்றின் பிரஜைகளாயினும் சரி அல்லது ஜேர்மன் பிரஜா உரிமை இருந்தும் போதிய அளவு ஜேர்மன் மொழி தெரியாத போதிலும் சரி நீங்கள் கூட்டுமாநில காரியாலயத்தின் குடியகல்வும் அகதிகள் காரியாலய பிரிவிற்கு இந்த ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பில் கலந்துக்கொள்வதற்காக அனுமதி வழங்கும் படி விண்ணப்பம் செய்யலாம்.

பாடசாலைக்கு செல்லும் சிறுவர்களும், இளைஞர்களும், வயது வந்த இளையோரும் இந்த வகுப்பில் கலந்துக்கொள்ள முடியாது.

## ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பு என்றால் என்ன?

இந்த ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பின் முக்கிய பகுதியாக அதிகூடிய பட்சம் 600 பாடசாலை மணித்தியாலங்கள் மொழி வகுப்பு நடைபெறும். அத்துடன் 100 பாட மணித்தியாலங்கள் அடங்கிய ஜெர்மன் சமூக கலாச்சார மொழி சரித்திர சட்ட ஒழுங்கை வழிநடத்தும் வகுப்பு வழங்கப்படும். மொழி கற்பிக்கும் வகுப்பு படி பல அத்தியாயமாக பிரிக்கப்படும். ஒவ்வொரு அத்தியாயத்திலும் 100 பாட மணித்தியாலங்கள் என்று பிரிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் 300 பாடசாலை மணித்தியால வகுப்புகள் அடிப்படை மொழி வகுப்புகளும், இதைத் தொடர்ந்து 300 பாட மணித்தியாலங்கள் உயர் தர மொழி வகுப்புகளும் நடைபெறும்.

மொழியை கற்பிக்கும் வகுப்பில் உங்களது நாளாந்த வாழ்க்கையில் பேசுவதற்கும் எழுதுவதற்கும் தேவையான சொற்களை கற்பிக்கப்படும். இவ்வேளையில் காரியாலயத்துடன் தொடர்பு கொள்கையில் அல்லது உங்களது அயல் வீட்டாருடன் கதைப்பதற்கு தேவையான மொழியையோ அல்லது உங்களுடன் தொழில் புரிபவருடன் கதைப்பதற்கோ அல்லது கடிதம் எழுதுவதற்கோ அல்லது விண்ணப்பங்களை நிரப்பவதற்கு, தேவையானதை பூர்த்தி செய்யும் அளவிற்கு மொழி கற்பிக்கப்படும்.

உங்களுக்கு இந்த வழி நடத்தும் வகுப்பில் ஜெர்மன் வாழ்க்கை கலாச்சாரம் சம்பந்தமான விடயத்தில் தகவல்களையும் சட்டத்தையும், கலாச்சார நவீனகால சரித்திர சம்பந்தமான விடயத்தைம் கற்பிக்கப்படும்.

இதைவிட விசேட ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்புகள், உதாரணமாக எழுத வாசிக்க முடியாத பெண்களுக்கும் பெற்றோர்களுக்கும் இளைஞர்களுக்கும் வழங்கப்படும். இந்த வகுப்புக்கான நேரம் 1.000 பாடசாலை மணித்தியாலங்களாகும். நீங்கள் விரைவில் ஜேர்மன் மொழியை கற்றுக்கொள்விர்களானால் இப்பாடத்தை விரைவான வகுப்பில் கற்றுக்கொள்ளலாம். இதை நீங்கள் இவ்வகுப்பில் 430 பாடசாலை மணித்தியாங்களில் கற்றுக்கொள்ளலாம்.

நீங்கள் எந்த அத்தியாத்தில் இருந்து தொடங்கவேண்டும் என்பதை உங்களது பாடசாலை வகுப்பு தொடங்கும் முன்னர் ஒரு பரீட்சை மூலம் முடிவு செய்துக்கொள்ளலாம்.

## இறுதிப் பரீட்சையில் கலந்துக்கொள்வது

இந்த வகுப்பு முற்றுபெறும் வேளையில் இரண்டு வித்தியாசமான பரீட்சைகள் நடத்தப்படும். ஒரு பகுதியில் ஜெர்மன் மொழிக்கான பரீட்சை, இப்பரீட்சையில் நீங்கள் போதிய அளவு ஜேர்மன் மொழியை கற்றுக்கொண்டதாக நிரூபிப்பிர்களானாலும் அத்துடன் கலாச்சார சட்ட போன்ற வழிநடத்தும் வகுப்பிலும் சித்தியடைவீர்களானால் ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு

KNr. 630.009k Tamil BAMF 11/2017

வருகிறீர்கள். அத்துடன் இதற்காக ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்புக்கான சான்றிதழையும் "Zertifikat integrationskurs" பெற்றுக்கொள்வீர்கள்.

இந்த வகுப்பில் நீங்கள் சித்தியடையாத பட்சத்தில் உங்களுக்கு, நீங்கள் இவ்வகுப்பில் கலந்துக்கொண்டதற்காவும் இவ்வகுப்பில் பெற்றுக்கொண்ட சான்றிதழ்களை அத்தாட்சிப் படுத்தி ஒரு படிவம் தரப்படும்.

இறுதி பரீட்சைக்கு கலந்துக்கொள்வதற்கு பணம் செலுத்த தேவையில்லை.

இந்த ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பில் கலந்துக் கொள்வதால் நீங்கள் பெறும் நன்மை

ஐரோப்பிய நாட்டைத் தவிர்த்த வெளிநாட்டவர்கள் ஜெர்மன் நாட்டில் கால வரையரையற்ற வதிவிட (விசா) பெறுவதாயின் ஒரு சில நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும். இதில் அளவிற்கு தேவையான ஜெர்மன் மொழியும், அடிப்படை சட்ட, கலாச்சார, ஜெர்மன் வாழ்க்கையையிட்டிய விடையங்களையும் அறிந்திருக்கவேண்டும் என்பவை அடங்கும். இந்த வகுப்பில் வெற்றிகரமாக உங்களது பரீட்சையில் சித்தியடைந்தால் இந்த நிபந்தனையில் ஒன்று பூர்த்தியாகிவிடும். இதைவிட நீங்கள் விரைவில் ஜெர்மன் பிரஜா உரிமை பெற வாய்ப்புகள் உண்டு.

இதைவிட இந்த ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பில் பெற்ற மொழி அறிவு ஜேர்மன் நாட்டின் நாளாந்தம் வாழ்க்கையின் தராதரத்தை இலகுவாக்கும். அத்துடன் வேலை வாய்ப்புக்கான நிலையை உயர்த்தும்.

ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பில் அனுமதி பெறுவதற்கான கூட்டுமாநில காரியாலயத்திற்கு விண்ணப்பம் செய்தலும் இவ்வகுப்பிற்காக பாடசாலையில் பதிவு செய்தல்

தயவுசெய்து இந்த வகுப்பிற்கு அனுமதி பெறும் விண்ணப்பப் பத்திரத்தை முழுமையாகவும் வாசிக்கக்கூடிய வகையிலும் நிரப்பவும். தேவையானால் உங்கள் அருகாமையில் இப்படியான வகுப்பை நடத்தும் பாடசாலையை நாடவும். இப்பாடசாலை உங்கள் விண்ணப்பத்தை நிரப்ப உதவி செய்யும். இந்த விண்ணப்பத்தை உங்கள் வட்டாரத்திற்கு பொறுப்பான அருகாமையிலுள்ள கூட்டுமாநில காரியாலயத்திற்கு அனுப்பவும்.

உங்களுக்கு இந்த ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்புக்கு அனுமதி கிடைக்குமாயின் கூட்டுமாநில காரியாலயம் உங்களுக்கு அனுமதியை (Berechtiungsschein) எழுத்து மூலம் வழங்கும். இதே வேளையில் உங்களது வீட்டுக்கு அருகாமையிலுள்ள அனைத்து ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பு நடைபெறும் பாடசாலைகளின் முகவரியை அனுப்பி வைக்கும்.

இந்த வகுப்பில் கலந்துக்கொள்ளலாம் என்று கிடைக்கும் அனுமதி பத்திரம் ஒரு வருடம் செல்லுபடியாகும். இதில் எவ்வளவு காலம் இது செல்லுபாடியாகும் என திகதியும் குறிக்கப்படும். இந்த செல்லுபடியாகும் நாட்களுக்குள் இவ் ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பில் பதிவு செய்ய வேண்டும். தயவுசெய்து ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பிற்காக உங்களுக்கு குறிக்கப்படும் நிலையத்துடன் தொடர்பு கொண்டு இந்த எழுத்து மூலம் கிடைத்த அனுமதி பத்திரத்தை அவர்களிடம் கொடுக்கவும். இதுவரை உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட நிலையம் பற்றி அறிவிக்கப்படாவிட்டால், இயலுமானவரை விரைவாக உங்கள் தெரிவில் ஒரு வகுப்பு நடத்தும் நிலையத்தில் நீங்கள் பதிவுசெய்து கொள்ளுங்கள்

விரைவாக வகுப்பில் பங்கேற்பதற்பதை உறுதிசெய்வதற்காக கூட்டுமாநிலக் காரியாலயம் உங்களை ஒரு குறிப்பிட்ட பாட நிலையத்திற்கு அனுப்ப முடியும்.

நீங்கள் இவ்வகுப்பிற்காக பதிவு செய்யும் பாடசாலை எவ்வளவு காலத்துக்குள் இவ்வகுப்பு தொடங்கப்படும் என்று உங்களுக்கு கண்டிப்பாக அறிவிக்க வேண்டும். இவ்வகுப்பிற்காக நீங்கள் பதிவு செய்த ஆறு வாரத்திற்குள் இவ்வகுப்பை பாடசாலை தொடங்க வேண்டும். இக்காலத்தக்குள் வகுப்பு தொடங்காத பட்சத்தில் இப்பாடசாலை இதை உங்களுக்கு அறிவிக்க வேண்டும். தற்சமயம் பாடசாலையை மாற்றுவதானால் பழைய பாடசாலை அனுமதிப்பத்திரத்தை திரும்பவும் உங்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

தயவுசெய்து நீங்கள் கவனத்திற் கொள்ளுங்கள், உங்களது பங்கேற்பதற்கான உரிமை, பதிவு செய்யப்பட்ட பின்னர் உங்களுக்கு ஏற்புடைய காரணங்களினால் ஆகக் கூடியது ஒரு வருடங்களுக்குள் நீங்கள் ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பை ஆரம்பிக்காவிட்டால் அல்லது வகுப்பில் ஒருவருடங்களுக்கு பங்குபெறா விட்டால், அது செல்லுபடியாகாமல் போகும்.

பயிற்சித்திட்டத்தில் முறையாக பங்கேற்றல்

ஒத்துழைத்து முன்னேற்றும் பயிற்சித்திட்டத்தின் நோக்கத்தை அடையும் பொருட்டு பயிற்சித்திட்டத்தில் முறையாக பங்கேற்க வேண்டும். அதாவது வகுப்புகளுக்கு வழக்கமாக வந்து இறுதி தேர்விலும் பங்கேற்பது அல்லது மொழி பாட மணித்தியாலங்களில் மீண்டும் பங்கேற்க வேண்டுமானால் பயிற்சித்திட்டத்தில் முறையான பங்கேற்பு அவசியமானதாகும். உங்களது பாடத்திட்ட வழங்குநர் உங்கள் வேண்டுகோளையடுத்து உங்கள் பங்கேற்புக்கான எழுத்துப்பூர்வ உறுதியை வழங்குவார்.

பொதுவாக, பாடத்திட்டத்தின் ஒரு பகுதியை நிறைவுசெய்தால் மட்டுமே பாடத்திட்ட வழங்குநரை மாற்ற அனுமதிக்கப்படும். இதுதவிர இம் மாற்றம் விசேட சூழ்நிலைகளைக் முன்வைத்தால் மாத்திரமே சாத்தியமாகும், உதாரணமாக வீடு மாறினால், பகுதிநேர வகுப்பிலிருந்து முழுநேர வகுப்பிற்கு மாறினால், பிள்ளைகள் பராமரிப்புக் இயலுமானதாகினால் அல்லது ஒரு தொழிற்கல்வியைத் தொடங்கினால் அல்லது பாடத்திட்டத்தின் நிறைவில் ஒரு தொழிலைப் பெறக்கூடியதாக இருந்தால்.

<u>ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்புக்கான கட்டணம்</u>

இவ் ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்புக்காக நீங்கள் 1.95 யூரோ படி ஒரு பாடசாலை மணித்தியாலத்திற்கு இப்பாடசாலைக்கு செலுத்த வேண்டும். உங்களால் செலுத்தப்படும் பணம் ஒரு அத்தியாத்திற்கு 100 மணித்தியாலத்திற்குரிய பணமாகும். அத்துடன் சமூக கலாச்சார சட்ட ஒழுங்கை வழிநடத்தும் வகுப்பிற்காக, வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்னரே இக்கட்டணத்தைச் செலுத்த வேண்டும். நீங்கள் வகுப்பிற்கு சமூகமளிக்காத வேளையில் இதற்காக கட்டிய பணம் திருப்பி தரப்பட மாட்டாது. உங்களுக்கு சொந்த வருமானம் இல்லாத வேளையில் உங்கள் வாழ்க்கை செலவிற்கு பொறுப்பாக உள்ளவர் இப்பணத்தை செலுத்த வேண்டும்.

நீங்கள் வேலையில்லாப்பணம் II பெறுபவீர்களானால், அல்லது சமூக உதவிப் பணம் பெறுபவீர்களானால் அல்லது வருமானம் குறைவினால் இப்பணம் கட்ட முடியாத நிலையில், இப்பாடசாலைக்குரிய கட்டணத்தை கட்டாமல் விடுவதற்கு விண்ணப்பம் செய்து பணம் கட்டுவதை தவிர்த்துக்கொள்ளலாம். இப்பணத்தை மேற் கருதப்பட்டவாறு கட்டமுடியாத வேளையில் எழுத்து மூலம் நகரத்திற்கு பொறுப்பாக உள்ள கூட்டுமாநிலத்திற்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும். எது உங்களுக்கு பொறுப்பாக உள்ள கூட்டுமாநிலம் என்று முகவரி பட்டியலை பார்த்து அறிந்துக்கொள்ளலாம்.

உங்கள் பணத் தேவைக்கான ஆதாரத்தின் பிரதியொன்றை அனுப்பி வைக்கவும். (பொருத்தமான சான்றிதழின் பிரதி, வேலையில்லாதவர்க்கான பணம் 11, சமூக உதவிப்பணம், வீட்டுவசதி உதவிப்பணம், மாணவர் கடன் [BAFOG], குழந்தைக்கான மேலதிக உதவிப்பணம், புகலிடம் கோருபவர்களுக்கான உதவிப்பணம் குறித்த சட்டத்தைப் பின்பற்றுவதற்கான உதவிப்பணங்கள், பகல் நேரக் கவனிப்புக் கட்டண விலக்கு, வானொலி, தொலைக்காட்சி உரிம (GEZ) கட்டண விலக்கு, உள்நாட்டு சமூக சீட்டு, இன்னும் பல). இவ்விண்ணப்பத்தை சாத்தியம் என்றால், நீங்கள் பாடத்தைத் தொடங்க முன்னர் சமர்ப்பிக்கவும். நீங்கள் இந்த விண்ணப்பத்தை வகுப்பு நடைபெறும் காலத்தில் செய்தால், பொதுவாக கட்டணத்தை விலக்குவது வகுப்பு ஆரம்பித்த காலம் தொடக்கமான பின்நோக்கிய காலத்திற்கு வழங்கப்படாமல் விடலாம்.

<u>பிள்ளைகள் பராமரிப்பு</u>

தற்சமயம் ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பிற்குச் செல்வதற்கு உங்களுக்கு பிள்ளைகள் பராமரிப்பு வசதி தேவைப்பட்டால், இது குறித்து பாடசாலைக்குத் தெரிவியுங்கள். அவர்கள் அங்கு உள்ள பிள்ளைகள் பராமரிப்பு வசதி குறித்து உங்களுக்கு அறியத்தருவார்கள்.

<u>செலவு செய்தவற்றை திரும்ப பெற்றுக் கொள்வது</u>

டிசம்பர் 8, 2007க்குப் பின் நடந்த இறுதித் தேர்வை சரியாக செய்து முடித்திருந்தால் நீங்கள் ஏற்கனவே செலுத்திய தொகையின் 50 % செலவை இடம்பெயர்தல் மற்றும் புலம்பெயர்ந்தோர்க்கான அரசு அலுவலகத்தில் திரும்பப் பெறலாம். இருப்பினும், பயிற்சியில் முதல்முறையாக பங்கு பெறுவதற்கான தகுதிநிலை உறுதிப்படுத்தல் மற்றும் இறுதித் தேர்வு நிறைவுசெய்தலுக்கு இடையே இரண்டு வருடங்களுக்கு மேல் கடந்திராவிட்டல் மட்டுமே இது பொருதும். உங்கள் மீட்புபணத்தை பெறுவதற்கு இடம்பெயர்தல் மற்றும் புலம்பெயர்ந்தோர் அரசு அலுவலகத்தின் மண்டல அலுவலகத்தில் ஒரு விண்ணப்பத்தை பதிவு செய்ய வேண்டும்.

<u>பயணச் செலவுகள்</u>

இடம்பெயர்தல் மற்றும் புலம்பெயர்ந்தோர் அரசு அலுவலகம் உங்கள் செலவுகளை வழங்குவதில் விலக்கு அளிக்குமானால், பொதுவாக ஒத்துழைத்து முன்னேற்றும் வகுப்பிற்குச் செல்ல பயணச் செலவுகளுக்கென ஒரு உதவித்தொகையைப் பெறுவீர்கள். இந்த உதவித்தொகை வகுப்பில் பங்கேற்ற நாளுக்கான முழுத்தொகை வடிவத்தில் வழங்கப்படும். இருப்பினும் இதற்கான நிபந்தனையாக எப்பொழுதும், வகுப்பு

நடக்கும் இடம் உங்கள் வீட்டிலிருந்து ஆகக் குறைந்தது 3 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கவேண்டும். இந்த பயணச்செலவு உதவிக்காக நீங்கள் உங்கள் பிரதேசத்தில் இதற்குப் பொறுப்பான கூட்டரசுத் திணைக்களத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

பின்-தொடர்தல் மொழிப் பயிற்சியை மீண்டும் பெறுதல்

மொழித் தேர்வில் ஜெர்மன் மொழியை போதுமான படிப்புடன் உங்களால் பேச முடியவில்லை என்றால், ஒரு தடவை என்ற அடிப்படையில் மொழிப் பாடத்தின் 300 பாடத்திட்ட மணித்தியாலங்கள் வரைக்கும் திரும்ப படிக்க அனுமதிக்கப்பட்டு, மீண்டும் ஒருமுறை இலவசமாக மொழிப் பரீட்சையை எடுக்கவும் முடியும். இருப்பினும், பாடங்களுக்கு நீங்கள் ஒழுங்காகச் செல்ல வேண்டும்.

ஒரு எழுதிப் பழகும் பயிற்சியில் பங்கேற்கிறீர்கள் என்றால் மொழிப் பரீட்சையில் பங்கேற்பது அவசியமில்லை.

பாட மணித்தியாலங்களை மீண்டும் தொடர விரும்பினால் அரசு அலுவலகத்தின் உரிய பிராந்திய அலுவலகத்தில் ஒரு விண்ணப்பத்தைப் பதிவு செய்ய வேண்டும்.

நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள்:

இந்த விதிமுறைத் தாளில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் பயிற்சி வழங்குநரிடம், உங்கள் உள்ளூர் புலம்பெயர்தல் அலுவலகம் அல்லது தகுந்த மண்டல அலுவலகத்தில் கிடைக்கும். www.bamf.de என்கிற வலைத்தளத்தில் இருந்தும் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விதிமுறைத் தாளில் ஒருங்கிணைத்தல் பயிற்சியில் பங்கேற்பதற்கான மிக முக்கிய விபரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கொண்ட விபரங்களை உங்கள் பயிற்சி வழங்குநர் வழங்குவார்.

புலம்பெயர்தல் ஆலோசனை அலுவலகங்கள் மற்றும் இளைஞர் புலம்பெயர்தல் சேவைகள் வழங்கும் சலுகைகளையும் குறித்துக் கொள்ளவும். இந்த அலுவலகங்களால் தேவையான விண்ணப்பங்கள் வழங்குதல், உங்கள் சந்தேகங்களைத் தீர்த்தல், பிரச்சனைகளைத் தீர்த்தல் ஆகியவற்றில் உதவி செய்து சரியான ஒருங்கிணைப்பு பயிற்சியை உங்களுக்கு தேடித் தர முடியும். உங்கள் உள்ளூர் புலம்பெயர்தல் அலுவலகம், இடம்பெயர்தல் மற்றும் புலம்பெயர்வோர்க்கான அரசு அலுவலகத்தின் தகுந்த மண்டல அலுவலகம் அல்லது இணையத்தில் www.bamf.de வலைத்தளத்தில் அண்டைப்பகுதியில் உள்ள புலம்பெயர்தல் ஆலோசனை அலுவலகம் மற்றும் இளைஞர் புலம்பெயர்தல் சேவைகளை அறிந்து கொள்ளலாம்.

ஒரு ஒருங்கிணைப்புப் பயிற்சியின் போது நிலையான விபத்துக் காப்பீடில் சேர மாட்டீர்கள் என்பதைக் குறித்துக் கொள்ளவும்.